# இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்
# London Anglo Tamil Association

## வருடாந்த கலைவிழா
## Annual Kalai Vizha

பிரதம விருந்தினர்
வித்துவான் க. ந. வேலன் அவர்கள்

**13.07.2002**

**KINGSMEAD SCHOOL**
Southbury Road
Enfield Middx EN1 1YQ

வட இலண்டன் தமிழ்ப் பாடசாலை
**NORTH LONDON TAMIL SCHOOL**

# Royal Jewelry

உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணத்தில்



மனம் கவரும் தங்க நகைகள்
தங்கம் - கரட் உத்தரவாதம்
தாலி - பொன்னுருக்கல் வசதிகள்
உங்கள் தேவைகளுக்கேற்ற வண்ண
நகைகள் பிரத்தியோகமாய் தயாரிக்கும் வசதிகள்
சாத்திர விதிகளுக்கு ஏற்ப நவரத்தின
மோதிரங்கள் ஓடர்களுக்குச் செய்து கொடுக்கப்படும்
புன்னகைக்கு நிகர் எங்கள் பொன்னகையன்றோ!

200 பவுண்களுக்கு மேல் நகை வாங்குவோருக்கு ஒரு கைக்கடிகாரம் இலவசம்

## றோயல் ஜுவல்ரி

287, High Street North, Eastham,
Manor Park, London E12 6SL
Tel: 020 8472 5500
Fax: 020 8472 5687

உங்கள் தேவையே எங்கள் சேவை
வாரத்தில் ஏழு நாட்களும் திறக்கப்படும்.

# இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்
## (சங்க கீதம்)

இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம் - நம்
இனிய தமிழ்ச்சங்கம் வாழிய வாழிய வாழியவே
இயல் இசையுடன் நாடகம் எனவே - நம்
இனிமைத் தமிழின் முத்தமிழ்ச் சுவையை
இன்புடன் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம்
- வாழிய வாழிய வாழியவே

அன்னை மொழியின் மழலையை அகர முதல எழுத்தினை
அன்புத் தமிழின் அறத்தினை ஆய்வுத் தமிழின் ஆற்றலை
பரதக் கலையின் சிறப்பினை - பண்ணிசையின் சுவையினை
பழகு தமிழ்ப் பண்பினை- பரந்த தமிழ் நெறியினை
இன்புடன் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்
- வாழிய வாழிய வாழியவே

கன்னித் தமிழின் கற்பினை - கவின் தமிழின் வளத்தினை
தெள்ளு தமிழ்க் குறளினை தெளிந்த தமிழ் நடையினை
துள்ளு தமிழ்க் கவியினை தூய தமிழ்ச் சொல்லினை
அள்ளு தமிழ் அமுதினை அருந்தமிழ் மொழியினை
இன்புடன் கற்றிட உதவிடும் சங்கம் - நம்
இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்
- வாழிய வாழிய வாழியவே



## *LATA's ADMINISTRATION & EDUCATION TEAM*

### MANAGEMENT COMMITTEE

| | |
|---|---|
| Mr. A. Kantharuban | President |
| Mr. S. Siva Chandran | Secretary |
| Mrs. I. Suntharesh | Asst. Secretary |
| Mrs. C. Sarvananthan | Treasurer |
| Mr. A. Manoharan | Asst. Treasurer |
| Mr V Ilansei | Administrator |
| Mr. P. Nanthabalan | Asst Administrator |
| Mrs. G. Masilamany | Member |
| Mrs. C. Ravindrakumaran | Member |

### MORNING CLASSES

Head Teacher: Mrs. B. Thurairatnam
(Keyboard)
Tamil: Mrs. P. Selvanathan
Tamil: Mrs. K. Baheerathan
Religion: Mr. S. Sivachandran
Dance: Mrs. G. Suthakaran
Music: Mrs. P. Thayaparan
Violin: Mrs. S. Navayogarajah
Miruthangam: Mr J.Pararajasingam
Gujarati: Mrs.S. Patel

### EVENING CLASSES

Head Teacher: Mr.S.Arthithan
(Science)
Mathematics: Mr.S. Sivachandran
French: Mrs. T. Giritharan
Maths & Science: Mr. S. Sivanesanathan
(Asst- Teacher)

# சங்கத் தலைவரின் செய்தி

இன்று எம் சங்கம் நடாத்துகின்ற இக் கலைவிழாவிலே பங்கு பற்றக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிகவும் பூரிப்படைகிறேன். இச் சங்கம் 1989ம் ஆண்டு தொடங்கிய காலத்திலிருந்தே இச் சங்கத்தில் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையனவாக நானிருந்துள்ளேன். எனது மகள் இத் தமிழ் பாடசாலையில் 1989ம் ஆண்டிலிருந்து கல்வி கற்றவர். அவர் இன்று தமிழில் பேசவும், வாசிக்கவும், எழுதவும் கூடியவராக இருக்கிறார் என்றால் அதற்கு இத் தமிழ் பாடசாலைதான் காரணம் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

எம் சங்கம் கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக வட இலண்டனில் வாழும் தமிழ்மக்களிற்கும், அதனை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் தமிழ் மக்களிற்கும் அளப்பரிய சேவையை செய்து வருகின்றது. இங்கு வாழும் தமிழ் பிள்ளைகளிற்கு தாய்மொழிக் கல்வியுடன் சைவசமயத்தையும் கற்பித்தும், கலைப்பாடங்களான பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, விசைப்பலகை (Key Board) , பிடில் (Violin) , மிருதங்கம் போன்ற பாடங்களை பயிற்றுவித்தும் வருகின்றது.மேலும் மாலை நேரத்தில் எம்பிள்ளைகளிற்கு கணிதம், விஞ்ஞானம், பிரஞ்மொழி போன்ற பாடங்களைப் படிப்பித்தும் இச் சங்கம் பெரும் சேவையாற்றி வருகின்றது.

பாடசாலைப் படிப்புடன் நின்றுவிடாமல், மாணவர்களின் புறஉலக ஈடுபாடுகளைக் கருத்தில் கொண்டு, அவர்களின் உடல், உள நல வளர்ச்சியை வழியமைத்திடும் வகையில் உதைபந்தாட்டப் போட்டிகளிலும், மெய்வல்லுனர் போட்டிகளிலும் பங்கேற்க வைத்து வெற்றிகள் பெற்றிட வழியமைத்துக் கொடுக்கின்றது. அத்துடன் தமிழ்ப் பொதுத் தாபனங்கள் நிகழ்த்துகின்ற மொழி, கலைப்போட்டிகளில் மாணவர்களை பங்கேற்கச் செய்து - பரிசுகளை பெறவைத்து அவர்களிற்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றது.

எம் சங்கம் வருடாவருடம் நடாத்தும் நத்தார் தின இராப்போசன விருந்தும் - நடனமும் (X ' mas Dinner & Disco) நிகழ்வின் மூலம் - நம் இளம் தலைமுறை யினருக்கு மகிழ்வினையும், நம் மாணவர் - பெற்றோர் - ஆசிரியர் வட இலண்டன் வாழ் தமிழ் மக்கள் ஆகியோர் கூடி - பேசி மகிழ்ந்திடவும் வழியமைத்துக் கொடுக்கின்றது.

அத்துடன் கோடைக்கால ஒருநாள் சுற்றுலாவை வருடா வருடம் நிகழ்த்தி இரண்டு பேரூந்துகளில் சுமார் நூறு பேருக்கும் கூடுதலானோரை கடற்கரைக்கு அழைத்துச் சென்று , எம் மக்களிற்கு உடலிற்கும், உள்ளத்திற்கும், உற்சாகத்தையும், எங்களிற்கிடையில் மேலும் புரிந்துணர்வுகளையும் ஒற்றுமையையும் வளர்க்க உதவுகின்றது. முதியவர்முதல் - குழந்தைகள் வரை எல்லா வயதினரும் உற்சாகமாக இச் சுற்றுலாவில் கலந்து மகிழ்ந்து மனநிறைவடைவதற்கு இச் சங்கம் ஆற்றும் சேவை அளப்பரியது.

தற்போது 70 மாணவர்கள் பாடசாலையில் கல்விபயில்கின்றனர். தமிழ் பாடத்திட்டம் அமுல்படுத்தப்பட்டு, பாடப்புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாடசாலையில் வருடத்திற்கு நாலு கலை நிகழ்வுகள் - மாணவர்களால் நிகழ்த்தப்படுகின்றன. இதன் மூலம் அவர்கள் தாம் கற்ற கல்வியறிவை மேடையேற்றிட சந்தர்ப்பம் கொடுக்கப்படுகின்றது.

மாணவர்களிற்கு சமயபாட வகுப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. எமது மொழியும் - சமயமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. தமிழ் மொழியறிவும், சைவசமய அறிவும், இன்றைய புலம் பெயர் வாழ் தமிழ் பிள்ளைகளிற்கு அத்தியாவசியமானது. இதனை உணர்ந்து நம் சங்கம் சைவ சமய பாடவகுப்பினை நடாத்த முன்வந்துள்ளது பாராட்டுக்குரியது.

இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு எம் பாடசாலை ஆசிரியர்கள் கணிசமான பங்களிப்பினை வழங்கி வருகின்றார்கள். அவர்களின் கடும் உழைப்பும் - மாணவர்களின் ஆர்வமும், பெற்றோரின் ஈடுபாடும், நிர்வாகத்தினரின் ஒழுங்கான வழிநடத்தலும், இன்று இங்கு சிறப்பான கலைநிகழ்வுகளாக உங்கள் முன்

அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இக்கலைவிழாவின் வெற்றிக்கும் சங்கத்தின் வள்ச்சிக்கும் பலவித வழிகளிலும் உதவிடும் ஆசிரியர்கள் - பெற்றோர்கள் - மாணவர்கள் - சங்க நிர்வாகத்தினர் அனைவருக்கும் என் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தப் பதின்மூன்று ஆண்டுகளில் எம் சங்கம் பலவித தடைகளையும் தடங்கல்களையும் தாண்டி, தன் கொள்கைக்கேற்ப சேவையாற்றி வருகின்றது. இன்று இப்பாடசாலை நிர்வாகத்தினர் எடுக்கின்ற பல நடவடிக்கைகள், எம் பாடசாலையினதும் - புலம்பெயர் வாழ் தமிழ் பிள்ளைகளினதும் வருங்கால வளர்ச்சிக்கு நிட்சயமாக வழிவகுக்கும் எனத் திடமாக நம்புகின்றேன்.

இச்சங்கம் மேன்மேலும் வளர்ந்து எம் மக்களிற்கு ஆக்க பூர்வமான பணிகளைச் செய்திட என் வாழ்த்துக்களை கூறி இக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

**அ. காந்தரூபன்.**
(சங்கத் தலைவர்)


Best Wishes

from

# K N Enterprises

SUPERMARKET & OFF LICENCE

Food - Wines - Spirits
Groceries - News - Magazines

391 Barking Road
London E6 2JT

Tel: 020 8552 1001

# பிரதம விருந்தினர்
# வித்துவான் திரு க.ந. வேலன் அவர்களின் வாழ்த்துரை

கடந்த புத்தாண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனுபவம் புதுமையானதாக இருந்தது.

கல்வியின் மையம் மாணவர்கள் என்பதை என் இலட்சியமாகக் கொண்டு 40 ஆண்டு காலம் வாத்தியார் வேலை பார்த்திருக்கிறேன். இந்தக் கல்வி நிறுவனத்திலும் என் இலட்சியம் நடைமுறையில் இருப்பதைக் கண்டு வியந்தேன்.

மாணவர்களே நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதோடு தாமும் பங்கெடுத்து தம் அக ஆளுமையைக்(Internal personality) காட்டினார்கள். அறிவு முக்கியம். அதைவிட ஆளுமை முக்கியம். அது வளர வேண்டுமானால் மாணவரை மையப்படுத்தி அவர்களை செயற்படுத்த வேண்டும். இந்த வகையில் இந்தக் கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்களும் நிர்வாகிகளும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

எல்லோருக்கும் எனது வாழ்த்துக்கள்.

க.ந.வேலன்

*The First & Best Tamil Silk House in London*

6 Kumars Silk House



Exclusive showroom for quality product.
2002 New collections. 9 different kind of
Puresilk Wedding Coorai Saries, Pure
Kanchipuram Maangalya, Subhavashram,
Kanchi, Tharani, Abhinaya and Kolam.
Also we have Ukthamugi, PriankaLenga Soli, Gagara Solies.

For Man:
Big collection of Gentlemen & Gentlemen
brand Suiting, Shirting & all the sizes from
28” to 42” all imported from Italy.
Massive Choice and big select in





Now choice and big selection

-------Now choice is yours-------

As advertised on Deepam TV &
TTN TV

6 Kumars Silk House
285, High Street North, Eastham,
Manorpark
London E12 6SL England

**Tel / Fax: 020 8471 5742**

*உங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் ஜவுளி சமுத்திரம்*

## *6 குமார்ஸ் சில்க் ஹவுஸ்*

20 வருடங்கள் கடந்தும் இணையில்லா சேவை

**ANDREW LOVE MP**
Member of Parliament for Edmonton

House of Commons
London SW1A 0AA

Tel: 020 - 7219 6377
Fax: 020 - 7219 6623

e-mail: AndyLoveMP@aol.com
website: www.AndyLoveMP.com

Mr Siva Chandran
14 Somerset Road
Edmonton
N18 1HQ

2nd July 2002

Dear Mr Chandran

**Message for the London Anglo Tamil Association**

I am pleased to have the opportunity to send you a message again this year for your Association members.

Since the London Anglo Tamil Association was first established in 1989 you have worked tirelessly on behalf of the Tamil community in Enfield. In the past I have visited the Tamil school and seen up to 65 children studying the Tamil culture and language.

I look forward to joining you on 13th July for the Kalai Vila function at Kingsmead school.

With all good wishes for your work in the coming year.

Yours sincerely

**Andy Love MP**

# LAKSHMIS

## JEWELLERS & SILK HOUSE



பிரமிக்கத்தக்க அழகுக் காட்சியறையில் திருமண வைபவத்துக்குத்
தேவையான வைரத் தாலிக்கொடி முதல் பட்டுச்சேலைகள் வரை
ஒரேயிடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய முதலாவது தமிழர் களஞ்சியம்

நம்பிக்கையுடன் வாருங்கள்

## லக்சுமிஸ் ஜுவலர்ஸ்

276 High Street North
East Ham London E12 6SA
Tel: 020 8470 5600
Fax: 020 8470 3448

Opening Hours:
Mon - Sun 10.30am - 7.00pm
Tax free for overseas visitors

# கல்லூரி நிர்வாக பொறுப்பாளரின் பார்வையிலே................

இன்று எமது சங்கம் நடாத்துகின்ற இக் கலைவிழாவினிலே கலந்து கொண்டு சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவரின் அன்பிற்கும், ஆதரவிற்கும் நன்றி. எமது சங்கம் எட்மன்ரனில் வாழ்ந்த தமிழ் ஆர்வலர் ஒரு சிலரின் முயற்சியால் 1989ம் ஆண்டு சித்திரை மாதம் 15ம் திகதி தொடங்கப்பட்டது. இன்று பதின்மூன்று ஆண்டுகளையும் தாண்டி தன் கொள்கைக் கேற்ப சங்கம் அதன் சேவைகளை புலம்பெயர் வாழ்வில் வாழ்கின்ற தமிழ் மக்களிற்கு தனித்துவத்துடன் செய்து வருகின்றது.

தற்போதைய செயற்குழு கடந்தவருடம் ஆடி மாதம் 14ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. கடந்த ஒருவருடமாக இச்செயற்குழு சங்கத்தின் நீண்டகால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அதன் அடிப்படைக் கொள்கையான தமிழ் மொழிக்கல்வியின் மேம்பாட்டிற்கு பல வழிகளிலும் பயன் தரக்கூடிய வகையில் பணியாற்றி வருகின்றது.

எம் சங்கத்தின் முக்கிய நோக்கம் யாதெனில் - மேற்குலகில் வாழ்கின்ற எம் தமிழ்ப் பிள்ளைகள் தம் தாய்மொழியான தமிழை நன்கு பேசிடவும், வாசித்திடவும், எழுதிடவும் அவர்களிற்கு பயிற்றுவிப்பதேயாகும். இத்துடன் நம் கலாச்சாரத்தையும், மொழியையும், மதத்தையும், இங்குள்ள பிள்ளைகளிற்கு வாய்ப்பாட்டு, சமயம், பரதநாட்டியம், விசைப்பலகை (Key board) பிடில் (Violin) மிருதங்கம் போன்ற பாடங்களை நடத்துவதின் மூலமும் பயிற்றுவித்து வருகின்றோம்.

இந்த இடத்தில் நான் புலம் பெயர் வாழ் தமிழ் மக்களிற்கு ஒரு கருத்தை தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மொழியறிவின்றி பயிற்றுவிக்கப்படும் கலையும், கலாச்சாரமும் இங்கு வாழ்கின்ற வாழப்போகின்ற நம் அடுத்த சந்ததியினருக்கு நிட்சயமாக ஓர் நிலையான இன மொழி அடையாளத்தை அவர்கட்கு தரப்போவதில்லை. கடந்த ஒரு வருடமாக ஓர் தமிழ்ப் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பாளராக கடமையாற்றுகையிலும் - 19 வருடங்களாக மேற்குலக வாழ்க்கையின் புற நிகழ்வுகளை நோக்குகையிலும் - நான் காண்கின்ற - வருத்தப் படக்கூடிய நிகழ்வு என்னவெனில் இங்கு வாழ்கின்ற பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகட்கு மொழியறிவை ஊட்டுவதில் உள்ள ஆர்வத்திலும் விட, அவர்களிற்கு பரத நாட்டியம் அல்லது வேறு கலாச்சார கலைப் பாடங்களை கடும் பிரயத்தனப்பட்டு பயில வைத்து அரங்கேற்று வதிலேயே மிக்க ஆர்வமுள்ளவர்களாக உள்ளார்கள். பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்க வரும் பெற்றோர் கூட, தமிழப்பாடத்தையோ அதன் ஆசிரியர் பற்றியோ அதிகம் கவலைப்படாமல் பரத நாட்டியம், விசைப்பலகை, பிடில் போன்ற கலைப் பாடங்களை பிள்ளைகளிற்கு கற்பிக்க ஆர்வம் கொண்டு நிற்கின்ற நிலைமையை நோக்கக் கூடியதாக உள்ளது. இதை பிழையென நான் கூறவில்லை. ஆனால் அடிப்படை அறிவான தாய்மொழி அறிவை புறக்கணித்து - இக்கலைப் பாடங்களில் ஆர்வம் காட்டுகின்ற பெற்றோர் - எவ்வகையில் இது வருங்காலத்தில் பிள்ளைகளிற்கு நிலைத்து உதவுக்கூடியது என்பதை சிந்திக்கத் தவறுகின்றார்கள் என்ற வருத்தமே ஏற்படுகின்றது.

இங்கு வாழ்கின்ற நம் குழந்தைகளின் சுற்றல், சூழல், அவர்களின் தாய்மொழியான தமிழில் இல்லை. ஊடகங்களின் தாக்கங்கள் அதிகரித்துள்ள இந்நிலையில் நம் இளம் சந்ததியினர் தம் தாய் மொழிச்சூழலில் வாழும் சந்தர்ப்பங்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. இந்நிலையில் தமிழ் ஆலயங்கள் - தமிழ்ப் பாடசாலைகள் - வீட்டில் பெற்றோரின் உரையாடல் என்பவையே பிள்ளைகளிற்கு ஓரளவு தமிழ் புறச்சூழலை கொடுக்கக் கூடியவையாக உள்ளன. எனவே இவற்றை நோக்கில் கொண்டு முதல் மொழியாக ஆங்கிலத்தையும், தாய்மொழியை இரண்டாம் மொழியாகவும் பயில்கின்ற நம் சிறார்களிற்கு ஏற்ற வகையில் தமிழ் அறிவை ஊட்டுவதில் புலம் பெயர் வாழ் தமிழ் அறிஞர்கள் கூடிய கருத்தும் - கவனமும் எடுத்தல் வேண்டுமென அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன்.

எமது சங்கம் சனிக்கிழமைகளில் காலை தமிழ் மொழிப் பாடசாலையையும், பின்னேரம் கணிதம் - விஞ்ஞானம் - பிரஞ்மொழி (French) ஆகிய பாடங்களையும் படிப்பித்து வருகின்றது.

**காலை நேரப் பாடசாலையில்** ஒவ்வொரு தவணையும் 10 பாடவகுப்புகளும், 1 கலை நிகழ்வும் நடைபெறும். மொத்தம் வருடத்தில் 29 பாட வகுப்புகளும் 4 கலை நிகழ்வுகளும் நடைபெறும். பாடசாலை காலை 9 மணி தொடங்கி மதியம் 1 மணி வரை நடைபெறும். 6 பாடங்களைக் கொண்டதாக

பாட நேரம் பிரிக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் தமிழ் வாய்ப்பாட்டு போன்றன கட்டாய பாடங்களாக்கப் பட்டுள்ளது. சமயம் சைவசமய பிள்ளைகளிற்குக் கட்டாய பாடமாக்கப்படும். அத்துடன் 2 பாடங்களை பின்வரும் 4 பாடங்களில் இருந்து தெரிவு செய்யலாம் (பரத நாட்டியம் - மிருதங்கம் - பிடில் - விசைப்பலகை)

தமிழ்மொழி தவிர்ந்த மற்றைய பாடங்கள் ஒரு பாடநேரத்திற்கு மேல் படிக்க அனுமதிக்கப்படமாட்டாது. எனவே இதன்மூலம் நாங்கள் தமிழ் மொழி பாடத்தை ஒவ்வொருபிள்ளையும் ஆகக் குறைந்தது 2 பாட நேரமாவது படிக்கக் கூடிய வாய்ப்பை உருவாக்கியுள்ளோம்.

இவ்விடயத்தில் நான் பெற்றோரிடம் கூறிக் கொள்ள விரும்புவது என்னவெனில் பாடசாலையில் வருடத்தில் சுமார் 30 மணித்தியாலங்கள் மட்டும் தமிழ் படித்து ஒரு பிள்ளை தமிழ்மொழியறிவை பெற்றிட முடியாது. பெற்றோர் வீட்டில் இதற்கான முயற்சிகளை கூடுதலாக எடுத்தல் வேண்டும், பிள்ளைகளுடன் தமிழில் உரையாடல், தமிழ் நிகழ்ச்சிகளிற்கு பிள்ளைகளை கூட்டிச்செல்லல், ஆலயங்கள் பொதுத்தாபனங்கள் போன்றவை நடாத்துகின்ற தமிழ்மொழி அறிவுப் போட்டிகளில் பங்கு பற்றுதல், பங்குபற்ற பிள்ளைகளை ஊக்குவித்தல் - தமிழ் ஊடகச் செய்திகளை கேட்கச் செய்தல் போன்ற சிறு சிறு நிகழ்வுகள் மூலமாகவேனும் - பிள்ளைகளிற்கு தமிழ் அறிவை கற்பித்தலில் நாம் ஆர்வம் காட்ட வேண்டும். இது பெற்றோரின் முக்கிய கடமை.

இவற்றைக் கருத்தில் கொண்டே எம் பாடசாலையில் ஐப்பசி மாதத்தில் கலைமகள் விழாவையும், மார்கழி மாதத்தில் நத்தார் பண்டிகையையும், தைமாதத்தில் தைப் பொங்கலையும் சித்திரை மாதத்தில் தமிழர் புதுவருடப் பிறப்பையும் கலை நிகழ்வுகளாக, எம்மாணவர்களைக்கொண்டு காலை 9 - 1 மணி வரை தமிழ்ப் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் கொண்டாடி வருகின்றோம். . வருகின்ற ஆண்டுகளில் இவ்வாறு பாடசாலை மண்டபத்தில் நடக்க விருக்கின்ற நாலு நிகழ்வுகளையும் ஆடிமாதத்தில் நாம் வருடா வருடம் வைக்க இருக்கின்ற கலை விழாவிற்கான ஆயுத்த நிகழ்வுகளாக நடாத்த விருக்கின்றோம். இது கலைவிழா நிகழ்வுகளைத் தயாரிக்க ஆசிரியர்கட்கும், பங்குபற்றும் மாணவர்கட்கும் பெரிதும் உதவியாகவும், கடைசிநேரத்தில் பழக்கவும் - பழகவும் எடுக்கும் சிரமத்தின் அளவைக் குறைக்கவும் உதவும் என நம்புகின்றேன்.

மேலும் நாம் மார்கழி மாதத்தில் கடந்த 22 -12 -01 அன்று இராப் போசன விருந்தும் - துள்ளிசை நடனமும், நிகழ்வை சிறப்புடன் நடாத்தினோம். இதன் மூலம் பாடசாலை £859 சேகரித்ததை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். இவ்வருடம் இந்நிகழ்வு 21 - 12 - 02 நடைபெற உள்ளது. கடந்த வருடம் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் நாம் முதன்முதலாக சில போட்டிகளை (தமிழில் ஆம், இல்லை எனக் கூறாமல் 1 நிமிடம் கதைத்தல், சங்கீத நாற்காலி) நடாத்தி நிகழ்வு தொடங்கியமுதல் இரண்டு மணி (6-8)நேரத்தை பிரயோசனமாக உபயோகித்தோம். இந்தவாறாக நாம் எவ்வழியிலும் நம் இளம் சந்ததியினருக்கு தமிழ் மொழி அறிவை ஊட்டுவதில் எல்லா வழிகளிலும் எம்மாலான முயற்சிகளை எடுத்து வருகின்றோம்.

அந்த வகையிலே நாம் பாடசாலையில் நடாத்திய கலை நிகழ்ச்சிகளின் போதும், எம்மாணவர்களே வரவேற்புரை நன்றியுரை கூறியும், நிகழ்ச்சிகளை அறிவிக்கும் அறிவிப்பாளர் களாகவும் பங்கேற்றனர். இன்றும் இக்கலை விழாவிலே அந்த அடிப்படையிலேயே முயன்றவரை எம் மாணவர்களே எல்லாப் பணிகளையும் செய்ய ஊக்குவித்துள்ளோம்.

நாம் ஒவ்வொரு வருடமும் கோடைகாலச் சுற்றுலாசென்று வருகின்றோம். இம்முறை இச்சுற்றுலா 27-07-02 இடம் பெறுகின்றது. இதன் மூலம் நாம், நம் பாடசாலை பெற்றோர்கள் - ஆசிரியர்கள், நிர்வாகத்தினர், நண்பர்கள் ஆகியோர் கூடிக் குலவி மகிழ்ந்திடவும், புரிந்துணர்வுகளை வளர்த்திடவும் உதவக் கூடியதாக உள்ளது.

எமது பாடசாலை மாணவர்கள் உதைபந்தாட்டத்திலே சிறப்பான வெற்றிகளை கடந்த 2 வருடங்களாக ஈட்டி வருகின்றார்கள். உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ள சிறார்களை நாம் சனிக்கிழமைகளில் மாலை நேரம் அருகிலுள்ள பூங்காவிற்கு அழைத்துச் சென்று பயிற்சி கொடுத்து அவர்களின் உடல் நலத்திற்கும், மனநலத்திற்கும் வளர்ச்சியளித்து வருகின்றோம். எம் பாடசாலையில் 10 வயதிற்குட்பட்ட மாணவர்களின் குழு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய போட்டிகளில் 2000

ஆண்டு 2ம் இடத்தையும் 2001ம் ஆண்டு 1ம் இடத்தையும் 2002ம் ஆண்டு 2ம் இடத்தையும் அடைந்தது. தமிழர் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (TSSA) நடாத்திய போட்டிகளில் 10 வயதிற்குட்பட்டோர் 2001ம் ஆண்டு 2ம் இடத்தையும் 12 வயதிற்குட்பட்டோர் 2002ம் ஆண்டு 2ம் இடத்தையும் பெற்றுள்ளனர். இவ் வெற்றிகளை நாம் எமக்குள்ள ஆகக் குறைந்த வசதிகளுடனேயே அடைந்துள்ளோம் என்பதை இவ்விடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எமது பாடசாலை தமிழ்மொழியினையும் கலாச்சாரத்தையும் இங்கைய தமிழ் மாணவர்களிற்கு பயிற்றுவித்திடும் அதே வேளையில் அவர்களின் அடிப்படைக் கல்வியறிவை வளர்த்திடுமுகமாகவும் சனிக்கிழமைகளில் மதியத்தின் பின் (1.15 pm - 4.00 p.m) கணிதம் விஞ்ஞானம், பிரஞ்மொழி (French) ஆகிய வகுப்புகளை தகுந்த ஆசிரியர் மூலம் பயிற்றுவிக்கின்றது. இதன் மூலம் எம்பிள்ளைகள் தம் மேற்குலகக் கல்வியறிவை நல்ல ஒரு சூழலில் பெற்று அறிவை வளர்த்திட எம் சங்கம் செயற்பட்டு வருகின்றது.

எமது பாடசாலை மாணவர்கள் இங்குள்ள சைவ ஆலயங்கள், சைவ முன்னேற்றச் சங்கம் தமிழர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் போன்ற தாபனங்கள் நடாத்துகின்ற தமிழ்ப் பேச்சுப் போட்டிகள், திருமுறை ஓதுதல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி பல பரிசுகளை பெற்று வருவதை இங்கு பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும் எமது பாடசாலை மாணவர்கள் வருடாவருடம் Oriental Fine Arts of Academy London (OFAAL) ஆல் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றி கலைப் பாடங்களில் (பரத நாட்டியம், பிடில், விசைப்பலகை, வாய்ப்பாட்டு, மிருதங்கம்) சிறந்த பெறு பேறுகளை அடைந்து வருகின்றார்கள்.

நாம் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் பாடுபட்டு வருகின்றோம். அந்த வகையில் இன்று இங்கு நடாத்தப்படுகின்ற கலை விழாக்கள் மூலம் எங்கள் பாடசாலையின் தரத்தையும், நோக்கத்தையும் தமிழ் மக்களிற்கு புரிய வைப்பதன் மூலமும் பெற்றோர்களை இங்கு பிள்ளைகளை கூட்டி வந்து தமிழ் படிக்க வைக்க ஊக்கப்படுத்துகின்றோம்.

புலம் பெயர் வாழ்வில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழப்பெற்றோரினதும் முக்கிய கடமை, தம் பிள்ளைகளிற்கு தமிழ் மொழியையும் - கலாச்சாரத்தையும் படிப்பிப்பது ஆகும். இதை மனதில் கொண்டு இன்று வட இலண்டனிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் வாழ்கின்ற தமிழ் மக்களிடம், உங்கள் பிள்ளைகளை தமிழ் படிக்க ஊக்குவியுங்கள். அவர்களை தமிழ் பாடசாலைக்கு அனுப்புங்கள், அவர்களின் தாய்மொழி அறிவில் கூடுதலாக கவனம் செலுத்துங்கள் என பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்று நடக்கின்ற இக்கலைவிழாவின் வெற்றிக்கு எங்கள் பாடசாலை ஆசிரியர்கள், பெரும்பங்களித்துள்ளார்கள். அவர்களின் கடும் உழைப்பும், மாணவர்களின் ஆர்வமும், பெற்றொரின் ஒத்துழைப்பும் இங்கு சிறப்பான கலைவிழா நிகழ்வை எமக்குத் தந்துள்ளது. அவர்களுக்கு என் நன்றி. மேலும் இக்கலைவிழா மலருக்கு விளம்பரம் தந்துதவிட்ட வணிகப் பெருமக்களுக்கும், விழா மண்டபத்தின் வாடகையை பொறுப்பேற்ற Veekay Autos தாபனத்தாருக்கும், அதிட்ட இலாபச்சீட்டினுக்கான பரிசில்களை தந்த அன்பர்களுக்கும், கலைவிழாவின் வெற்றிக்கு பல விதத்திலும் உதவிகள் புரிந்திட்ட அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்து இக்கட்டுரையை நிறைவு செய்கின்றென்.

எம்பாடசாலையின் தொடர்பு முகவரியையும், சனிக்கிழமை பாடசாலை நடக்கும் இடத்தின் விபரத்தை 14ம் பக்கத்தில் இணைத்துள்ளேன். அத்துடன் அடுத்த ஆண்டிற்கான (2002 / 2003) முதலாம் தவணையின் நேர அட்டவணையையும் முக்கிய நிகழ்வுகள் பற்றிய குறிப்பையும் இணைத்துள்ளேன்.

அன்புடன்
***திரு. வேந்தனார் இளஞ்சேய்***
(கல்லூரி நிர்வாகப் பொறுப்பாளர்)

# London Anglo Thamil Association(LATA)
# Kalai Vizha(13.07.2002)
# Programme

01. Lighting the traditional lamp

02. School Anthom

03. 2 Minutes silence

04. Welcome Speech (Tamil & English)

05. Dance - Ganesha Vanthanam, Dheepam Dance, Nadesa Gowthuvam

06. Speech by Special Guest Mr Andy Love(M.P.Edmonton)

07. Tamil Speech 1

08. Vocal by School Students

09. Violin by School Students

10. Miruthangam by School Students

11. Tamil Speech 2

12. Speech by Chairman Mr A.Kantharuban

13. Drama " Thiruvilaiyadal" (3 mini dramas)

14. Intermission

15. Dance - Saptham, Fisherman dance, Peacock Dance)

16. Abinaya Songs by School Students ( 3 songs)

17. Speech by Secretary Mr S.Siva Chandran

18. Poetry by School Student

19. Tamil Speech - 3

20. Key Board by School Students

21. Speech by Chief Guest Vidwan K.N.Velan

22. Drama by School Students

23. Vote of Thanks

24. Poetry by School Students

End

# இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச்சங்கம்
# கலைவிழா - 13.07.2002
# நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. சங்க கீதம்
3. மௌன அஞ்சலி
4. வரவேற்புரை( தமிழ்/ ஆங்கிலம்)
5. நடனம்( கணேச வந்தனம்/ தீப நடனம்/ நடேச கௌத்துவம்)
6. சிறப்பு விருந்தினர் உரை (எட்மன்ரன் பா.உ)
7. தமிழ் படிப்போம் - உரை
8. வாய்ப்பாட்டு ( தேனீ/ ஓடம்/ காணேனடி கண்ணனே)
9. பிடில்(வயலின்)
10. மிருதங்கம்
11. உட்கார இடம் தேடும் உலகத் தமிழன் - உரை
12. தலைமையுரை
13. நாடகம் - திருவிளையாடல்( தந்தைக்கு உபதேசம் செய்தல்/ ஞானப்பழம்/ விறகு வெட்டி)
14. இடைவேளை
15. நடனம் ( சப்தம்/மீனவர் நடனம்/ மயில் நடனம்)
16. அபிநயப் பாடல்கள்(மயில்/ தோட்டத்தில் மேயுது/ இடியும் மழையும்/ கண்ணன் எங்கள்)
17. செயலாளர் உரை
18. கவிதை - விருப்புடன் வந்திடுவீர்
19. மண்ணிற்கோர் மணித்துளி - உரை
20. விசைப்பலகை ( Key Board)
21. பிரதம விருந்தினர் உரை ( வித்துவான் திரு க.ந.வேலன்)
22. நாடகம்- கனவுலகத்தில் ஒரு காட்சி
23. நன்றியுரை
24. கவிதை - உரிமைக்குரல்
25. நிகழ்ச்சிகள் நிறைவு

## பாடசாலை தொடர்பு முகவரி

திரு. சிவ சந்திரன்
(செயலாளர்)
No.14 Somerset Road
Edmonton
London N18 1HQ
Tel: 020 8807 6361

பாடசாலை நடக்கும் இடம்
Brettenham Primary School
Brettenham Road
Edmonton
London N18 2ET

திரு வே. இளஞ்சேய்
(கல்லூரி நிர்வாகப் பொறுப்பாளர்)
No 4 Parkhurst Road
Walthamstow E17 7EG
Tel: 020 8923 5880

## தமிழ்ப்பாடசாலை 2002 - 2003 (தவணை -1)

| | | |
|---|---|---|
| 1. | 14. 09. 2002 | பாடசாலை |
| 2. | 21. 09. 2002 | பாடசாலை |
| 3. | 28. 09. 2002 | பாடசாலை |
| 4. | 05. 10. 2002 | பாடசாலை |
| 5. | 12. 10. 2002 | கலைமகள் விழா (பிரார்த்தனை மண்டபத்தில்) |
| | 19. 10. 2002 | விடுமுறை |
| | 26. 10. 2002 | விடுமுறை |
| 6. | 02. 11. 2002 | பாடசாலை |
| 7. | 09. 11. 2002 | பாடசாலை |
| 8. | 16. 11. 2002 | பாடசாலை |
| 9. | 23. 11. 2002 | பாடசாலை |
| | 30. 11. 2002 | விடுமுறை |
| 10. | 07. 12. 2002 | பாடசாலை |
| 11. | 14. 12. 2002 | நத்தார் விழா (பாடசாலை பிரார்த்தனை மண்டபம்) |

<u>முக்கிய தினங்கள்</u>

| | |
|---|---|
| 27. 07. 2002 | கோடைக்கால சுற்றுலா - Boscombe, Bournmouth |
| 28. 09. 2002 | வருடாந்த செயற் குழுக்கூட்டம் (11.30 AM - 1.00 PM)<br>கல்லூரி பிரார்த்தனை மண்டபம் |
| 21. 12. 2002 | நத்தார் இராப்போசன விருந்து<br>(Edmonton Angel, Community Centre) |



எமது தமிழ்ப்பாடசாலை அமைந்துள்ள கட்டடம்

## மாலை நேரப்பாடசாலை அதிபரின் ஆசியுரை

என் அருமை மாணவமணிகளே,
அன்புக்குரிய பெற்றோர்களே,
நட்புக்குரிய நிர்வாக - ஆசிரிய நண்பர்களே,

எங்கள் நாளைய தலைமுறைகளான இன்றைய மாணவ மணிகளின் தணியாத தமிழ்ப்பற்றிலும், அவர்தம் அயராத முயற்சியாலும், மற்றும் எமது சக ஆசிரிய, ஆசிரியைகளின் தளராத உழைப்பாலும் அரங்கு காணுகின்ற இன்றைய கலைவிழா நிகழ்ச்சிகள் சிறப்பே நிறைவேறிட எனது ஆசிகளையும், உளம்கனிந்த பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
உங்கள் சேவைக்குரியவர்
சிவ ஆதித்தன்
13. 07. 2002

## TREASURER'S REPORT

**LONDON ANGLO TAMIL ASSOCIATION (LATA)**

**NORTH LONDON TAMIL SCHOOL**

**DRAFT INCOME AND EXPENDITURE ACCOUNT**

**FOR THE PERIOD FROM 1/3/2001 TO 31/3/2002 (13 MONTHS)**

| INCOME | £ | £ | EXPENDITURE | £ |
|---|---|---|---|---|
| GRANT FROM LONDON BOROUGH OF ENFIELD | | 4606.82 | RENT | 7382.80 |
| CONTRIBUTION FROM PARENTS | | 10452.00 | TEACHERS ALLOWANCE | 6837.00 |
| MEMBERSHIP FEES | | 300.00 | EXAM FEES | 617.00 |
| FUNDRISING:- | | | SPORTS ACTIVITIES | 280.00 |
| COLLECTION-DINNER & DANCE(22/12/01) | 859.14 | | | |
| COLLECTION - ANNUAL SUMMER TRIP(28/07/01) | 288.00 | | BOOKS TO SCHOOL | 167.10 |
| | ------------- | 1147.14 | | |
| | | | GENERAL EXPENSES | 186.69 |
| COLLECTION EXAM FEES | | 617.00 | BANK CHARGES/RETURN CHEQUES | 86.28 |
| BANK BALANCE B/F AT 1ST MARCH 2001 | | 2847.98 | **BANK BALANCE C/F AT 31ST MARCH 2002** | **4414.07** |
| | | ------------- | | ------------- |
| | | 19970.94 | | 19970.94 |
| | | ======== | | ======== |
| BANK BALANCE B/F AT 1ST APRIL 2002 | | **4414.07** | | |

# LOTUS

PROPERTIES AND INVESTMENTS

*Insurance for*
*Home Contents*
*Buildings*
*Shops, Restaurants,*
*Offices, Hotels,*
*Clubs etc*
*Also*
*Residential Letting*

Reg No. 2385723

* Home Contents & Building Insurance @ Competitive Rates
* Doctor's Surgery Insurance @ Special rates
* Care Home & Nursing Home Insurance
* Travel Insurance from £7.80
* Shop Insurance from £250 per annum
* Motor Insurance @ Competitive rates - Super Bonus Policy
* Mortgages to suit you

Written Quotation available on request

19 Monkfrith Way
Southgate
London N14 5LY

Tel: 020 8368 6609
Fax: 020 8362 0913
http://www.lotus-insurance.co.uk
email: enquiry@lotus-insurance.co.uk

**020 8368 6609**

North London



# *NEW KANNAN STORES*

**OFF LICENCE**

**உங்களுக்குத் தேவையான மளிகைப்பொருட்கள்**
**இலங்கையிலும் இந்தியாவிலும் இருந்து**
**இறக்குமதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள்,**
**கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள், சஞ்சிகைகள்,**
CD, AUDIO & VIDEO
**என்பவற்றை சகாய விலையில் பெற்றுக்கொள்ளவும்.**
**மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் பூஜைக்குத் தேவையான அபிஷேகச் சாமான்கள்**
**சுவாமிப்படங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளவும்**
**வட இலண்டனில் நாட வேண்டிய ஒரே இடம்**

# நியூ கண்ணன் ஸ்ரோர்ஸ்

251B Fore Street Edmonton
London N18 2TY

**Tel: 020 8884 4979**

சிவ சிவ

23 ஆனி 5104 கலி
7 ஆடி 2002 கி.பி

# செயலாளர் செய்தியும் நன்றி நவிலலும்

மறையே மொழியே மண்ணே மறவர்களே வணக்கம்.
"உலகிதன் மருங்கினில் உதித்து வாழ் மொழிகளுள்
முதன் முதல் முகிழ்த்தவோர் மொழியெனும் பழமையள்"
என்கிறார், பேரறிஞர் புலியூர்க் கேசிகன்

புலியூர்க் கேசிகனார், தமிழ் மொழியே உலகின் முதிர்ந்த மூத்த முதல் மொழி என்கிறார். தாய் மொழிகளுக் கெல்லாம் தாய் மொழி, தமிழ் மொழி. ஐம்பதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே பேச்சு வழக்கில் இருந்து வருகிறது என்பர் பழம் பெரும் புலவர் பெருமக்கள்.

இந்த பழம் பெரும் புலவர்களுள் ஒருவர் தொல்காப்பியனார். இவர், தொல்காப்பியம் எனும் ஓர் தமிழ் இலக்கண நூலை, இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றினார். சில கலாநிதிகள் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் கூறுகிறார்கள். இந்நூல் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. எழுத்து சொல் பொருள் என ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களை கொண்டு ஒரு ஆயிரத்து அறுநூற்றி இரண்டு சூத்திரப் பாக்களால் ஆனது.

இதன் கண் முதற்சூத்திரப் பா,
"எழுத் தெனப் படுப
அகரமுதல்
னகர இறுவாய் முப்ப∴தென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே"

எனப் பகர்கிறது. எனவே, நாம் தமிழ்ச்சிறார்களுக்கு, தமிழ் கற்பிக்கும் போது, தமிழ் எழுத்துகள் முப்பது என்று கற்பிக்க வேண்டிய கடமை உடையவர்கள்.

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு
மெய் எழுத்துகள் பதினெட்டு.
எல்லாமாக முப்பது எழுத்துகள்.
ஆயுத எழுத்தையும் சேர்த்தால் முப்பத்தொன்று.

உயிரும் மெய்யும் சேர்ந்தே உயிர் மெய் ஆனது. உடல் உயிர் சேர்ந்தே மானிடம் செயற்படுகிறது. உயிர் மெய் எழுத்துகள் இத் தத்துவத்தை பிரதிபலிக்கின்ற மாத்திரம் அல்ல சொற்களை எழுத்து கூட்டுவதற்கும் உதவி புரிகிறது. நவீன மொழியாகிய ஆங்கிலத்தை நோக்கினால், சொற்களை எழுத்துக்கூட்டி ஒலித்தால் சொல்லின் ஒலி தோன்றாது மாத்திரம் அல்ல சில எழுத்தோசை சில சொற்களில் ஒலி இழந்து திகழ்கிறது. இவ்வாறான ஒலி மறைவுகள் தமிழ் சொற்களில் மிகக் குறைவு. தமிழ் எழுத்துகளின் ஒலி வடிவங்களில் தற்காலத் தமிழன் மாற்றத்தை ஏற்படுத்த முயல்கிறான். ஆனால் வரிவடிவ மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தொல்காப்பியர், திருவள்ளுவர், நாயன்மார்கள் உபயோகிக்காத ஒலி ஓசை மாற்றங்களை நாம் உபயோகிப்பது மிகக் குறைக்கப்பட வேண்டும்.

புலம் பெயர்ந்த சூழலில் நாம் வாழ்ந்து கொண்டாலும் மேற்கூறிய விழுமியங்களைப் போற்றி வாழ்வதில் எமது சங்கமும், மற்றைய சங்கங்களுடன் சேர்ந்து செயற்பட்டு வரும் முயற்சிக்கு, ஒத்தாசை புரியும் சகல தமிழ் நலன் விரும்பிகளுக்கும், வர்த்தகப் பெருமக்களுக்கும், தொண்டர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எனது நன்றி அறிதலைத் தெரிவிக்கும் இவ்வேளையில் இன்று, தமிழ் வருடம், கலியுகம் 5104 ம் ஆண்டு ஆனி மாதம் 29ம் நாள் சனிக்கிழமை இலண்டன் ஆங்கிலோ தமிழ்ச் சங்கம் கலை விழா கொண்டாடுகிறது. எண்ணித் துணிக கருமம் எனத் துணிந்து, சங்க காலம் தொட்டு ஒலித்த தமிழை நாமும், காலம் கருதி இருந்து கலங்காது, ஞாலம் கருதி, முத்தமிழை, மூத்த தமிழைப் போற்றி வளர்ப்போம். தமிழ் மறவர்களை என்றென்றும் நினைவு கூருவோம்.

குறி ஒன்றும் இல்லாத கூத்தனை வணங்குவோம்.
சிவாயநம

நன்றி
சிவசந்திரன்(செயலாளர்)

# Head Teacher's Report

My welcome and greetings to the chief guest parents and well wishers who have come to - day to view and encourage the performances of our students from the North London Tamil School run by the London Anglo Tamil Association. You being here today will give great encouragement and enthusiasm to the children.

Our school has stepped into its 14th year of life. I have been a member of the staff of this School from day one and have seen it bloom, blossom and flourish. It is with the help of the Tamil Community that we have been able to achieve this.

During the School year we have celebrated the Saraswathi Pooja, Christmas, Thai Pongal, Sivarathire and the Tamil New Year. These celebrations take place during the School sessions and our students abilities are shown by their entertainment with music and dance. A talk about the celebration is then given by a speaker.

our students have also participated in various competitions and football matches played against other schools and organisations

We also have an annual day trip to the seaside this year would be on 27. 07. 02 to the Bournemouth beach.

Our students have performed well at the fine Arts Examination held by the Oriental fine Arts Academy of London. For the last six years we have been sending students for this examination. We have presented candidates for Vocal, Bharathanatiam, Violin , Key board(Carnatic Music) and Mirudhangam.


We have group of qualified and dedicated teachers who have up graded our School. I wish them all success.

The management committee and parents have dedicated a lot of their time in helping running this School. Their help is much appreciated by all of us.


I hope this excellent assistance given by the teachers, Committee members, parents and well wishers towards this school will continue and help us preserve our culture and identity.

Thank you

Mrs Thurairatnam
Head teacher
Morning School



எமது பாடசாலை மாணவர்கள்



தமிழ் ஆசிரியைகளும் மாணவர்களும்




வாய்ப்பாட்டு ஆசிரியையும் மாணவர்களும்




விசைப்பலகை ஆசிரியையும் (தலைமை ஆசிரியை) மாணவர்களும்




பரதநாட்டிய ஆசிரியையும் மாணவர்களும்



பிடில் ஆசிரியையும் மாணவர்களும்




மிருதங்க ஆசிரியரும் மாணவர்களும்




சைவ சமய ஆசிரியரும் மாணவர்களில் சிலரும்



தமிழ்ப் பாடசாலை ஆசிரியர்கள்



Kujarathi Teacher and her Kujarathi Students


மாலை நேரப் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும்



TSSA 2002 Runnersup ( under 12 Football Team)



கலைமகள் விழா 2001 நிகழ்வில் ஒரு காட்சி




தமிழர் புதுவருடப்பிறப்பு விழா 2002 நிகழ்வில் ஒரு காட்சி



கோடைகாலச் சுற்றுலா 2001 இல் ஒரு காட்சி



TRO 2002 Runnersup ( under 10 Football Team)



பாடசாலை உதைபந்தாட்டக் குழு 2002




நத்தார் தின இராப்போசன விருந்து 2001

# RasamGayatri Silks

312 High Street North
Eastham London E12 6SA
Tel: 020 8552 6060
website:www.rasamsilk.com

மிலேனியத்தில் மிளிரும்
ஜவளி சமுத்திரம்
கண்கொள்ளாத காட்சிதரும்
நவீன **Soft 7** வகை டிசைனில்
கூறைச்சேலைகள்

**Millennium Designer**
**Silk Sarees**
**Dakshinotri - Golden**
**Gayatri**
**Kaanchi**
**Jari Tissue**
**Kolam**
**Rangoli Gold**
**Aboorva Double Gold**
**Aboorva Double Gold**
**Stain Guard Gayatri**
**Meena**
**Butta Silk Sarees**
**(Lanksn Soil, Gagara**
**Soil) Style Suits**

படையப்பா சேலை
எடுங்கள்
உடன்சேவை
**11a.m - 8p.m**
7 நாட்களும்
திறந்திருக்கும்



காஞ்சிபுரம்
காஞ்சிக் கொட்டன்
கதிர்க் கொட்டன்
தண்ணீர் பட்டாலும்
தப்பிக் கொள்ளும்
வண்ண டிசைன்களில்
மங்கையர்களின்
மனம் மகிழ்விக்கும்
கூறைச்சேலைகள்
பட்டு வேட்டி
பரத நாட்டிய உடைகள்
சர்வாணி
குருத்தா
கொட்டன்
கொட்டன் வேஸ்டி
சிறுவர்களுக்கான சிங்கப்பூர்
அமெரிக்க உடைகள்

# VEE KAY AUTOS

* MOT * Services * Clutches * Brakes

* Overhauls * Car Electricals * All Types of repairs



Contact:
Vagan/ Ashraf

48 Belfast Road,
London N16
Tel: 020 8806 1965

# VEE KAY AUTOS

## PARTS DEPARTMENT

ALL KINDS OF JAPANEESE & CONTINENTAL PARTS
AVAILABLE AT REASONABLE RATE

FOR FRIENDLY SERVICE
CALL

020 8806 2294/5

76 Stampford Hill
London N16

Printed by JRPrint Tel: 020 8503 6643